Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

| | | | | |
|---|---|---|---|---|
| Case No. | : | CC.No.128 /2020 | | |
| Witness for Complainant | : | PW 7 – Chief and Cross | | |
| Name | : | விதுன்குமார் | Taluk : | ஊத்தங்கரை |
| Father's / Husband Name | : | ராமசாமி | Calling : | |
| Village | : | | Age : | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 27.07.2026.

துவக்க நேரம்– 12.00 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுரை மாநகரம் தெப்பக்குளம் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் 05.06.2020 அன்று சாமல்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அதற்கு முன்னர் 01.06.2020 அன்று சிறப்பு காவல் உதவியாளர் திரு.சக்திவேல் என்பவர் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஏழுமலை என்பவரிடம் பெற்று வந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய சிஎஸ்ஆர் என் 49/2020 படி நிலைய ரசீது கொடுக்கப்பட்டு விசாரணையில் இருந்து வந்த மேற்படி CSR பரிசினை செய்து நிலைய குற்ற எண் 566/2020 , சட்ட பிரிவுகள் 294 பி, 323, 324இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் அன்றைய தினமே காலை 11 மணியளவில் வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் தமிழ்ச்செல்வன் மற்றும்

அரவிந்தன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவ இடத்திலிருந்து 11.30 மணி அளவில் சாட்சிகள் அரவிந்தன், தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் சுமார் இரண்டரை அடி நீளம் உள்ள தடி ஒன்றினை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் வழக்கின் சாட்சிகள் ஏழுமலை, அம்பிகா, சரத் என்கிற சரத்குமார், கனகராணி, ஆறுமுகம், தமிழ்ச்செல்வன், அரவிந்தன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் சம்பவம் உண்மை என தெரியவர எதிரிகளை தேடி செல்லும் நிலையில் கடந்த 07.06.2022 அன்று தேடியபோது சாமல்பட்டி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணன் என்பவர் 13 மணிக்கு குன்னத்தூர் பஸ் ஸ்டாப் அருகே வைத்து எதிரிகள் சிவக்குமார், சௌந்தர்யா ஆகியோரை கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க பிணையத்தின் பேரில் விடுவிக்கப்பட்டனர். பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 19.06.2020 அன்று வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. பூங்கொடி என்பவரை விசாரித்து காயம்பட்ட ஏழுமலை மற்றும் அம்பிகா ஆகியோரின் விபத்து பதிவேடுகளுடன் கூடிய காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றுகள் அ.சா.ஆ. 6 மற்றும் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் சாட்சிகள் கிருஷ்ணன், சக்திவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 29.06.2020 அன்று மூன்றாம் எதிரி வளர்மதி என்பவரை குன்னத்தூர் பஸ் ஸ்டாப் அருகே கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க பிணையத்தின் பேரில் விடுவிக்கப்பட்டார். பின்னர் வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் மூன்று எதிரிகள் மீது 03.07.2020 ம் தேதி அன்று சட்டபிரிவுகள் 294 பி, 323, 324 இதச ஆக எதிரிகள் மீது

இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. முதல் தகவல் அறிக்கையில் காலம் 3 ல் நிலையத்திற்கு தகவல் வந்த நேரமாக 05.06.2020 காலை 10 மணிக்கு வந்ததாக உள்ளது என்றால் வழக்கு பதிவு செய்யப்பட்ட நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது. பொது நாட்குறிப்பேட்டில் எப்போது பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் முதல் தகவல் அறிக்கையின் காலம் 3C ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 05.06.2020 தேதியன்றுதான் புகார் பெறப்பட்டுள்ளது, காலதாமதத்தை மறைக்க வேண்டி CSR வழக்கில் வழங்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையில் 01.06.2020 அன்று வழக்கின் புகார் பெறப்பட்டிருந்தால் முதல் தகவல் அறிக்கையில் காலம் 3C ல் எப்போது பொதுநாட்குறிப்பேட்டில் புகார் வரப்பட்டது என்பது குறித்து மற்றும் CSR ல் பதிவு செய்த விவரமும் அதில் குறிப்பிட்டு இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் யாருடையது என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆவணங்கள் எதுவும் அதைச் சார்ந்து தாக்கல் செய்யப்படவில்லை, பார்வையிடவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எதிரிகளுக்கு சொந்தமானது அவருடைய அனுபவத்தில் உள்ளது மேற்படி நிலம் சம்பந்தமாக வழக்கின் புகார்தாரர் எதிரிகள் ஊரில் கூட்டப்பட்ட பஞ்சாயத்திற்கு கட்டுப்படவில்லை என்பதற்காக கொடுத்த பொய் வழக்கு என்றால் சரியல்ல. புகார்தாரர் ஜேசிபி ஓட்டும்போது தன்னிச்சையாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கில் முதல் தகவல் அறிக்கை உட்பட முக்கிய ஆவணங்கள் 22.6.2020 அன்று நீதிமன்றத்திற்கு தாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொந்த விதத்தில் மேற்படி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டிருந்தால் உடனடியாக

நீதிமன்றத்திற்கு அனுப்பி இருப்பேன், அது பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்பதால் தான் 22.06.2020 அன்று நீதிமன்றத்திற்கு தாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் வரைபடம் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலம் ஆகியவை 18.12.2020 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் முன்பே அனுப்பப்பட்டது, நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டது தேதி தெரியாது. அம்பிகா வலி இருந்ததாக கற்பனையாக சொல்லி மருத்துவமனை சேர்ந்துள்ளார் என்றால் சரியல்ல.

4. படிவம் 95ல் 2–1/2 அடி நீளம் என்று குறிப்பிட்டுள்ளேன், ஆனால் அதன் பருமன் என்ன என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் படிவம் 91 ஆகியவை நான் சொன்ன தேதியில் தாக்கல் செய்யப்படவில்லை, நீதிமன்றத்திற்கு தாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் புகார்தாரர்களின் உறவுகவினர்களை மட்டுமே சாட்சியாக சேர்த்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியவர்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை, எதிரிகள் சாட்சிகளை திட்டவும் இல்லை, அடிக்கவும் இல்லை, மிரட்டவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஏழுமலை சிகிச்சைக்கு செல்லும்போது செங்கல் கொண்டு அடித்ததாக குறிப்பிட்டுள்ளார், அது குறித்து நான் விசாரித்தேனா என்றால் குச்சியால் அடித்ததாக உள்ளது.

5.அ.சா.1 என்னுடைய விசாரணையின் போது அம்பிகா தடுக்க வரும்போது அவரை தாக்கியதாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. தகராறு காரணமாக புகார்தாரர் தாமதமாக பின்னிட்டு யோசித்து எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் கைது கெய்ய்வில்லை என்றால் சரியல்ல. வழக்கில் முறையாக புலன் விசாரணை செய்யப்படவில்லை, முறையாக புலன் விசாரணை செய்யப்பட்டு இருந்தால் யாருடைய இடம் என்று தெரிய வந்திருக்கும்

எதிரிகள் மீது தவறு இல்லை என்று தெரிய வந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம்– 12.30 PM

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

Judicial Magistrate
Uthangarai.